திருப்பூர் சுற்றுவட்டார பகுதிகளில் கனமழை

பொதுமக்கள் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

திருப்பூர் பகுதிகளில் கனமழை பெய்து வருவதால் வாகனத்தில் முகப்பு விளக்கை எரியவிட்டு சென்றனர்.

திருப்பூர், செப். 20: திருப்பூர் பகுதிகளில் கனமழை பெய்து வருவதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

திருப்பூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த சில நாட்களாக வெயில் வாட்டி வதைத்து வந்தது. இந்த வெயிலின் காரணமாக பொதுமக்கள் கடும் சிரமத்தை சந்தித்து வந்தனர். இந்நிலையில், கடந்த 2 நாட்களாக மாவட்டம் முழுவதும் பல்வேறு பகுதிகளில் அவ்வப்போது மழை பெய்து வருகிறது. இந்த மழையின் காரணமாக வெப்பம் தணிந்து குளிர்ச்சியான சூழல் நிலவி வருவதால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இதற்கிடையே நேற்று காலை முதல் பல்வேறு பகுதிகளில் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. மாலை திடீரென திருப்பூர் ராயபுரம், சூசையாபுரம், புதிய பஸ் நிலையம், லட்சுமி நகர், பழைய பஸ் நிலையம், காங்கேயம் ரோடு, தாராபுரம் ரோடு உள்பட பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்தது. இந்த மழை 2 மணி நேரத்திற்கும் மேலாக நீடித்தது. இதனால் மாலையில் வேலை முடிந்து வீடு திரும்பிய வாகன ஓட்டிகள் பலரும் அவதியடைந்தனர். இதுபோல் பள்ளி முடிந்து வீடு திரும்பிய மாணவ மாணவிகளும் சிரமத்தை சந்தித்தனர். இதற்கிடையே காலையில் வெயில் மாலையில் மழை என பருவ மாற்றம் ஏற்பட்டுள்ளதால் பொதுமக்கள் சளி மற்றும் காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டால் உடனே அருகில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் அல்லது அரசு மருத்துவமனைகளுக்கு சென்று உரிய சிகிச்சை மேற்கொள்ள வேண்டும் என டாக்டர்கள் அறிவுறுத்தியுள்ளனர். இதுபோல் குளிர்ச்சியான உணவு பொருட்களை தவிர்க்கவும் அறிவுறுத்தியுள்ளனர். திருப்பூர் அதன் சுற்றுவட்டார பகுதியில் கன மழை பெய்ததால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

தாராபுரம் பகுதியில் உள்ள

சிவன் கோயில்களில் சிறப்பு பிரதோஷ வழிபாடு

ஏராளமான பக்தர்கள் சாமி தரிசனம்

தாராபுரத்தில் அகத்திய முனிவரால் ஆற்று மணலில் பிரதிஷ்டை செய்யப்பட்ட அகிலாண்டேஸ்வரி உடனமர் அகஸ்தீஸ்வரர் கோயிலில் சிவபெருமானுக்கு சிறப்பு அலங்காரங்கள் செய்யப்பட்டு பக்தர்களின் தரிசனத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தாராபுரம், செப்.20: வடமாநிலத்தில் கேத்தரநாத் மலைப்பகுதியில் உள்ள பனி லிங்கத்திற்கு அடுத்தபடியாக தாராபுரத்தில் அகத்திய முனிவரால் அமராவதி ஆற்று மணலில் லிங்கம் வடிவமைத்து பிரதிஷ்டை செய்யப்பட்ட நூற்றாண்டுகள் பழமையான அருள்மிகு அகிலாண்டேஸ்வரி உடனமர் அகத்தீஸ்வரர் திருக்கோவில், மீனாட்சிபுரம் பகுதியில் உள்ள மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில், சோளக்கடை வீதியில் உள்ள அருள்மிகு பாலதண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் , நாகநாதசுவாமி திருக்கோயில் உள்ளிட்ட சிவன் கோவில்களில் உள்ளிட்ட பல்வேறு சிவதலங்களில் நேற்று பிரதோஷம் வெகு விமர்சையாக நடைபெற்றது.

இதில் சிவபெருமானுக்கும், நந்தி பெருமானுக்கும் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தேன், பால், தயிர், பஞ்சாமிர்தம், விபூதி, சந்தனம், பன்னீர், மலர்கள் ஆகியவற்றால் அபிஷேகம் தீபாராதனையும் நடத்தப்பட்டன, இந்த சிறப்பு அபிஷேக ஆராதனை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் பக்தர்களுக்கு முன்பிறவியில் செய்த பாவங்கள் நீங்கி சிவக கடாட்சம் பெறுவார்கள் என்பது ஐதீகம். இதில், ஏராளமான சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த பொது மக்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். முடிவில் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை அந்தந்த பகுதி பிரதோஷ வழிபாட்டு குழுவினர் செய்திருந்தனர்.

ஜம்புக்கல் மலை ஆக்கிரமிப்பை தடுக்க விவசாயிகள் கோரிக்கை

உடுமலை வட்டாட்சியர் அலுவலகத்தை நேற்று முற்றுகையிட்ட விவசாயிகள்.

உடுமலை, செப். 20: உடுமலை அருகே உள்ள ஜம்புக்கல் மலையை தனி நபர் ஆக்கிரமித்திருப்பதை மீட்க வேண்டும் என வலியுறுத்தி விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் சார்பில் நேற்று உடுமலை வட்டாட்சியர் அலுவலகத்தை முற்றுயிடும் போராட்டம் நடந்தது.

இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில்,

“ஜம்புக்கல் மலை ஆக்கிரமிப்பு அதிகாரிகள் கண்டும் காணாமல் உள்ளனர். விவசாயி வேளாண் பயன்பாட்டுக்காக ஒரு மரக்கிளையை வெட்டினால் கூட நடவடிக்கை எடுக்கும் அதிகாரிகள், பெரிய மலையை ஆக்கிரமித்து, சட்ட விரோதமாக வெடி வைத்து தகர்த்து கனிமவள கொள்ளை அடிப்படை கண்டும் காணாமல் உள்ளனர்.

எனவே, ஆக்கிரமிப்பாளர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி வட்டாட்சியரிடம் மனு அளித்துள்ளோம்” என்றனர்.

சிக்கண்ணா கல்லூரியில் கலைத்திருவிழா

சிக்கண்ணா அரசு கல்லூரியில் கலைத்திருவிழாவில் மாணவர்களின் இசை நிகழ்ச்சி போட்டி நடந்தது.

திருப்பூர், செப்.20: திருப்பூர் சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரியில் நடைபெற்று வரும் கல்லூரி கலை திருவிழாவில் மாணவ, மாணவியர்களுக்கு அழிந்து வரும் கலைகள் பற்றிய ஓவியப் போட்டி, பாடல் வரிகள் எழுதும் போட்டி, வாத்திய இசை, ஐடியா மணி, வாழ்க்கையின் இசை உள்ளிட்ட போட்டிகள் நடந்தது.

இதில், ஏராளமான மாணவ, மாணவியர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். ஒவ்வொரு போட்டிகளுக்கும் துறை சார்ந்த வல்லுநர்கள் நடுவர்களாக அழைத்துவரப் பட்டிருந்தனர்.

கல்லூரி முதல்வர் கிருஷ்ணன் தலைமை வகித்தார், போராசிரியை விஜய் கீதா ஒருங்கிணைத்தனர். இப்போ போட்டிகளில் வெற்றி பெறும் மாணவ மாணவிகள் மாவட்ட மற்றும் மண்டல அளவிலான போட்டிக்கு தகுதி உடையவர்களாக தேர்வு செய்யப்பட இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொங்குபாளையம் ஊராட்சியில்

உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்

அவிநாசி அருகே பொங்குபாளையம் ஊராட்சியில், உங்களுடன் ஸ்டாலின் திட்டமுகாம் நேற்று நடைபெற்றது. இதில், திருப்பூர் மேயர் தினேஷ்குமார் பங்கேற்று பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற்றார்.

அவிநாசி, செப்.20: அவிநாசி அருகே பொங்குபாளையம் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்டமுகாம் நேற்று நடைபெற்றது.

முகாமில், திருப்பூர் தாசில்தார் கதிரேசன், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் வாணிஸ்ரீ, துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜெயந்தி, தீபா, செல்வகுமார், யசோதா ஆகியோர் முகாமை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

இதில், திருப்பூர் மேயர் தினேஷ்குமார், வடக்கு மாநகர திமுக பொறுப்பாளர் தங்கராஜ், திமுக பொதுக்குழு உறுப்பினர் சண்முகசுந்தரம், மாநில பிரசாரக்குழு உமாமகேசுவரி, திருப்பூர் ஒன்றிய திமுக செயலாளர் விஸ்வநாதன் ஆகியோர் பங்கேற்று மனுக்களை பெற்றனர்.

முகாமில் மகளிர் உரிமை உள்ளிட்ட 645 மனுக்களை பொதுமக்கள் வழங்கினர். மேலும், சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் மனுக்களை பெற்றுக்கொண்டு விரைவில் உரிய தீர்வு வழங்குவதாக தெரிவித்துள்ளனர். முகாமில், ஊராட்சி செயலர் தமிசரசன் உள்ளிட்ட ஊராட்சியை சேர்ந்த செயலர்கள் மற்றும் அரசு துறை அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

மின்விளக்கு எரியாததால் விபத்து அபாயம்

திருப்பூர், செப். 20: திருப்பூர் கல்லூரி சாலையில் தினமும் ஆயிரக்கணக்கான வாகனம் சென்று வருகிறது. இந்தப் பகுதியில் குற்ற செயல்களை தடுக்கவும், வாகன சோதனை மேற்கொள்ளவும் அணைப்பாளையம் பகுதியில் போலீஸ் சோதனை சாவடி அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் போலீசார் சோதனையில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்த நிலையில், சோதனை சாவடி முன்புறம் உள்ள உயர்மின் கோபுர விளக்குகள் கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாக எரியாமல் உள்ளது. அந்த பகுதி இருள் சூழ்ந்த பகுதியாக உள்ளது. இதனால், வாகன ஓட்டிகள் மற்றும் போலீசார் பல்வேறு சிரமத்தை சந்தித்து வருகிறார்கள். விபத்து ஏற்படும் அபாயம் உள்ளது.குறிப்பாக குற்ற செயல்களில் ஈடுபட்டு தப்பி வருகிறவர்களை கூட அடையாளம் காண முடியாத நிலை ஏற்படுகிறது. எனவே உயர்மின் கோபுர விளக்குகளை சீரமைக்க வேண்டுமென கோரிக்கை எழுந்துள்ளது.

திருப்பூர் ரேவதி மெடிக்கல் சென்டரில்

சிறுநீரக சிகிச்சை-பரிசோதனை முகாம்

திருப்பூர், செப். 20: திருப்பூர் ரேவதி மெடிக்கல் சென்டர் வளாகத்தில் சிறப்பு சிறுநீரக சிகிச்சை மற்றும் பரிசோதனை முகாம் நடக்கிறது. இதுகுறித்து ரேவதி மெடிக்கல் சென்டர் தலைவர் டாக்டர் ஈஸ்வர மூர்த்தி கூறியதவாது:

திருப்பூர் ரேவதி மெடிக்கல் சென்டர் வளாகத்தில் நாளை (21ம் தேதி, ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை சிறப்பு சிறுநீரக சிகிச்சை மற்றும் பரிசோதனை முகாம், சிறப்பு சிறுநீரக சிகிச்சை மற்றும் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை நிபுணர் ஹரிஷ் சிவஞானம் தலைமையில் நடைபெறுகிறது. இந்த முகாமில் சர்க்கரை அளவு பரிசோதனை, யூரியா, யூரிக் ஆசிட் கிரியாட்டினின் , சிறுநீர் பரிசோதனை, சிறப்பு சிறு நீரக மருத்துவரின் ஆலோசனை, உணவில் நிபுணர்கள் ஆலோசனை இலவசமாக வழங்கப்படுகிறது. இந்த முகாமில் கலந்து கொள்ள பதிவுக்கட்டணம் ரூ.200 மட்டுமே. இந்த முகாமில் சிறுநீர் தொற்று, சிறுநீரக பாதிப்பு, சிறுநீரக செயலிழப்பு, டயாலிசிஸ் சிகிச்சைகள் தேவைப்படுபவர்கள், ரத்த கொதிப்பு, அதீத ரத்த கொதிப்பு, சர்க்கரை நோய், இருதய நோயாளிகள் உடல் பருமன் உள்ளவர்கள், கை கால் வீக்கம் உள்ளவர்கள் மற்றும் தங்களது சிறுநீரக நலனை தெரிந்து கொள்ள விரும்பும் அனைவரும் கலந்து கொள்ளலாம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அதிமுக சார்பில் முக்கோணத்தில் அண்ணா பிறந்த நாள் பொதுக்கூட்டம்

உடுமலை, செப். 20: உடுமலை ஒன்றியம், ராகல்பாவி ஊராட்சி, முக்கோணத்தில் திருப்பூர் புறநகர் கிழக்கு மாவட்ட அதிமுக சார்பில் அண்ணா பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது.

மாவட்ட செயலாளரும், மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினருமான மகேந்திரன் சிறப்புரையாற்றினார்.முன்னதாக, உடுமலை வடக்கு ஒன்றிய செயலாளர் செழியன் வரவேற்றார். தலைமைக்கழக பேச்சாளர் அம்புஜம் சிறப்புரையாற்றினார். ஒன்றிய செயலாளர் காளீஸ்வரன் நன்றி கூறினார். பொதுக்கூட்டத்தில் மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் - நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கிளைக்கழக, வார்டு செயலாளர்கள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், தொண்டர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

கேன் ஃபின் ஹோம்ஸ் லிமிடெட்

Can Fin Homes Ltd (Sponsor : CANARA BANK) HOME LOANS + DEPOSITS Translating Dreams into Reality

திருப்பூர் கிளை
எண்.302/3, L.M.பில்டிங், முதல் தளம்,
கனரா வங்கி மேல் மாடியில், பல்லடம் பிரதான சாலை,
திருப்பூர் - 641 604. Mob: 76250 79209, 0421-2215977
CIN NO.L85110KA1987PLC008699
Email: tirupur@canfinhomes.com

பிற்சேர்க்கை : IV - A (கொடுக்கப்பட்ட விதி 8(6) பார்க்க)

அசையா சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்துக்களை சீரமைத்தல், கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 விதி 8 (6) -ன் கீழ் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் குறிப்பாக கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்கள் மற்றும் பொதுவாக பொது மக்களுக்கும் அறிவிப்பது என்னவென்றால் ஈட்டு கடன் அளித்தவரிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விரிவாக குறிப்பிட்டுள்ள அசையா சொத்துக்களை கேன் ஃபின் ஹோம்ஸ் லிமிடெட், திருப்பூர் கிளையின் அங்கீகாரம் பெற்ற அதிகாரி அசல் சுவாதீனம் எடுத்து அவற்றை **“எங்கு உள்ளதோ அங்கு அப்படியே, எப்படி உள்ளதோ அப்படியே மற்றும் எப்படியிருந்தாலும் அப்படியே”** என்ற அடிப்படையில் **19.09.2025** அன்று வரை உள்ள கடன் பாக்கி தொகையான **ரூ.23,37,760/- (ரூபாய் இருபத்து மூன்று லட்சத்து முப்பத்து ஏழாயிரத்து எழுநூற்று அறுபது மட்டும்)** மேலும் அதற்குண்டான வட்டி மற்றும பிற கட்டணங்கள் சேர்த்து **திருமதி.சுசிலா.G மற்றும் திரு.சக்திதாசன்.R** ஆகியோர்களிடமிருந்து வசூலிப்பதற்காக **28.10.2025** அன்று ஏலம் நிர்ணயம் செய்துள்ளார். **குறைந்தபட்ச விலை: ரூ.28,10,000/- (ரூபாய் இருபத்து எட்டு லட்சத்து பத்தாயிரம் மட்டும்) மற்றும் முன் வைப்பு தொகை: ரூ.2,81,000/- (ரூபாய் இரண்டு லட்சத்து எண்பத்து ஓராயிரம் மட்டும்)**

அசையா சொத்தின் விவரம்: திருப்பூர் பதிவு மாவட்டம், பல்லடம் துணைப்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட சூலூர் தாலுகா, வடம்பச்சேரி கிராமம், சுல்தான்பேட்டை பஞ்சாயத்து யூனியன், சூலூர் தாலுகா, கோயம்புத்தூர் - 641 669 என்ற முகவரியில் சர்வே புல எண்.541/B-ன்படி மனை எண்.2-ல் உள்ள **சொத்தின் கீழ் குறிப்பிட்டுள்ள எல்லைகள்:** மனை எண்.1-க்கு வடக்கே, மனை எண்.3-க்கு தெற்கே, கோபால் மற்றும் நடராஜன் ஆகியோர்களின் வீட்டிற்கு கிழக்கே, 16 அடி அகல வடக்கு தெற்கு நடைபாதைக்கு மேற்கே. அளவுகள்: வடக்கு தெற்காக மேற்கு பகுதியில்: 67 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பகுதியில்: 60 அடி, கிழக்கு மேற்காக வடக்கு பகுதியில்: 75 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பகுதியில்: 75 அடி, **மொத்தம்: 2077 சதுர அடிக்கு சமமான 193.02 சதுர மீட்டர் நிலத்துடன்** அங்கு கட்டப்பபடுள்ள கட்டிடம் அதனுடன் திருப்பூர், பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட விற்பனை பத்திர எண்.5586/2020-ல் விரிவாக குறிப்பிட்டுள்ள சொத்தின் விவரங்களின்படி நடைபாதை உரிமைகள் மற்றும் அனைத்து பிற உரிமைகள் உட்பட. **தெரிந்த வரை உள்ள வில்லங்கங்கள் : “எதுவுமில்லை”**

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை கேன் ஃபின் ஹோம்ஸ் லிமிடெட்-ன் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் அளிக்கப்பட்டுள்ளது **(https://www.canfinhomes.com/SearchAuction.aspx).** மின் ஏலத்தில் பங்கு பெறுபவர்களுக்கான இணைப்பு **www.bankeauctionwizard.com**-என்ற இணைப்பில் பார்வையிடவும்.

நாள்: 19.09.2025
இடம்: திருப்பூர்

ஒப்பம்/-
அதிகாரப்பூர்வ அதிகாரி
கேன் ஃபின் ஹோம்ஸ் லிமிடெட்

சூரியன் பதிப்பகம்
பெருமையுடன் வழங்கும் கையேடுகள்
TNPSC II & IIA தேர்வில் வெற்றி பெற...
TNUSRB, TNFUSRC நடத்துகின்ற தேர்வுகளுக்கான கைடுகள்
பொது அறிவு பாடக்குறிப்புகள் மற்றும் மாதிரி வினா-விடைகள் அடங்கிய கையேடுகள்...
பொதுத்தமிழ் மற்றும் கட்டாயத்தமிழ் தகுதித் தேர்வுக்கான சிறந்த வழிகாட்டி கையேடு...
₹1500/- (PART I & II)
₹335/-
இரண்டாம் நிலை காவலர் தேர்விற்கான சிறந்த கையேடு!
₹675/-
(இரண்டாம் நிலை காவலர், இரண்டாம் நிலை சிறைக்காவலர் மற்றும் தீயணைப்பாளர்)
QR code-ஐ ஸ்கேன் செய்து Payment செலுத்திவிட்டு, Payment செய்த ஸ்கிரீன் ஷாட்டையும் கொரியர் செய்வதற்கான முகவரி மற்றும் மொபைல் எண்ணையும் சேர்த்து 9840224816 என்ற WhatsApp நம்பருக்கு அனுப்பி உங்கள் ஆர்டரை உறுதி செய்து கொள்ளவும்.
மணியார்டர் மற்றும் டிமாண்ட் டிராஃப்ட் அனுப்புபவர்கள் சூரியன் பதிப்பகம், எண் 229, கச்சேரி ரோடு, மயிலாப்பூர், சென்னை - 4. என்ற முகவரிக்கு அனுப்பவும். போன்: 044 - 4220 9191
மேலும் விவரங்களுக்கு... 72990 27361 | 74487 28022

TNPSC GROUP II & IIA
பொதுத்தமிழ் 100/100 TNPSC GROUP II, II-A
இரண்டாம் நிலை காவலர் தேர்வு
மு. சிபிகுமரன்

காங்கயத்தில் 845 பயனாளிகளுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கல்

காங்கயம், செப்.20: காங்கயம் வட்டம், வீரனம்பாளையம் ஊராட்சியில் வருவாய்த்துறையின் சார்பில் பயனாளிகளுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

இதற்கு மாவட்ட கலெக்டர் மனிஷ் தலைமை தாங்கினார். இதில் அமைச்சர் மு.பெ. சாமிநாதன் கலந்து கொண்டு, வீரனம்பாளையம் ஊராட்சி பகுதிகளை சேர்ந்த 71 பயனாளிகளுக்கு ரூ.30.29 லட்சம் மதிப்பீட்டில் (நத்தம்) இலவச வீட்டு மனைப் பட்டாக்களையும், 664 பயனாளிகளுக்கு ரூ.2.97 கோடி மதிப்பீட்டில் (ஆதிதிராவிடர் நத்தம்) இ-பட்டாகளையும், 95 பயனாளிகளுக்கு கிராம கணக்கில் மாறுதல்களும், குடும்ப அட்டை 15 பயனாளிகளுக்கும் என மொத்தம் 845 பயனாளிகளுக்கு ரூ.3.27 கோடியில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் ஆர்டிஓ பெலிக்ஸ் ராஜா, வட்டாட்சியர் மோகனன், காங்கயம் ஒன்றிய திமுக செயலாளர் சிவானந்தன். நகர செயலாளர் சேமலையப்பன், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் புஷ்பாதேவி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டிரக்சன் பிரைவேட் லிட்.

OMKARA ASSETS RECONSTRUCTION PVT LTD.

CIN: U67100TZ2014PTC020363
பெருநிறுவன அலுவலகம்: கோஹினூர் சதுக்கம், 47ஆவது தளம், N.C. கெல்கர் மார்க், R.G. கட்கரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை - 400028.
மின்னஞ்சல்: karthi.govindasamy@omkaraarc.com
அதிகாரப்பூர்வ அலுவலர் கைப்பேசி எண்: +91-93446 84194/98840 62068 / 99623 33307

[பிற்சேர்க்கை - IV-A]
[பார்க்க விதி - 8(6) & 9(1)]

அசையாச் சொத்தின் மின் ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 (“சர்ஃபாசி சட்டம்”) அதனுடன் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6) & 9(1) ஆகியவற்றின் கீழ் அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்–ஏல அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) மற்றும் அடமானதாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில் ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்திடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டுள்ளதும் ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டிரக்ஷன் பிரைவேட் லிட். (OARPL) நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலரால் சுவாதீனம் செய்யப்பட்டுள்ளதுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தினை மின்–ஏல முறையில் விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டிரக்ஷன் பிரைவேட் லிமிடெட் (OARPL) (ஓம்காரா PS 06/2021–22 டிரஸ்ட்டின் டிரஸ்ட்டியாகச் செயல்படும் முறையில்) நிறுவனமானது கீழ்க்காணும் கணக்குகள் தொடர்பான அனைத்து நிலுவைத் தொகைகளையும் 25.06.2021 நாளிட்ட ஒப்படைப்பு ஒப்பந்தத்தின்படி இன்டஸ்இன்ட் வங்கி லிமிடெட் (IBL) நிறுவனத்திடமிருந்து (ஒப்படைப்பு நிறுவனம்) தொடர்புடைய கடனீட்டுச் சொத்துக்களுடன் சேர்த்துத் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டது. அதற்கிணங்க OARPL நிறுவனமானது ஒப்படைப்பு நிறுவனத்தின் சார்பாகக் களமிறங்கிக் கடன்களைத் திரும்பப் பெறவும் கடனீட்டுச் சொத்து மீது அமலாக்க நடவடிக்கை மேற்கொள்ளவும் அதிகாரம் பெற்றுள்ளது. அதையடுத்து OARPL நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலர் ஒப்படைப்பு நிறுவனத்திடமிருந்து கீழ்க்காணும் கடனீட்டுச் சொத்தின் நேரடி சுவாதீனத்தைக் கையகப்படுத்தியுள்ளார். இந்நிலையில் OARPL நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலர் கடன்களைத் திரும்பப் பெறும் பொருட்டுக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துக்களை விற்பனை செய்யத் திட்டமிட்டுள்ளார். இந்தச் சொத்துக்கள் கீழ்க்காணும் கடன்தாரர் மற்றும் உபக் கடன்தாரர்(கள்) ஆகியோரிடமிருந்து ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனம் எனும் முறையில் OARPL நிறுவனத்துக்கு வர வேண்டியுள்ளதும் கீழே தொடர்புடைய பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதுமான தொகையைத் திரும்பப் பெறும் வகையில் சர்ஃபாசி சட்டத்தின் பிரிவுகள் 13(2) மற்றும் (4) ஆகியவற்றின் கீழான உரிமைகள் மற்றும் அதிகாரங்களின்படி **“உள்ளது உள்ள இடத்தில்”, “உள்ளது உள்ளபடி”, “உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்”, “திரும்பப் பெறப்பட மாட்டாது”** எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும். கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்), கடனீட்டுச் சொத்துக்கள், நிலுவைத் தொகைகள், பிரிவு 13(2)–இன் கீழான கோரிக்கை அறிவிப்பின் தேதி, சுவாதீன தேதி, நிர்ணய விலை, ஏல உயர்வுத் தொகை, முன்வைப்புத்தொகை (EMD), ஆய்வு தேதி மற்றும் நேரம் ஆகியவற்றின் விவரங்கள் பின்வருமாறு:

கடன்தாரர் மற்றும் உப கடன்தாரர் பெயர்:	**திரு. பிரேம்குமார் R (கடன்தாரர்), திரு. K ராமச்சந்திரன் மற்றும் திரு. R சங்கர் (உப கடன்தாரர்கள்)**

கடனீட்டுச் சொத்து விபரங்கள்

திருப்பூர் 2ஆம் இணை சார்பதிவு அலுவலகத்தைச் சேர்ந்த 30.8.1993 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட உயில் ஆவண எண் Bk.III/209/1993–இன்கீழ் திரு. K ராமச்சந்திரன், த/பெ. திரு. கந்தசாமி செட்டியார் அவர்களின் சொத்து:

அனைத்து துண்டு மற்றும் பகுதிகள் கொண்ட சொத்து. பரப்பளவு 1207–1/2 சதுர அடிக் கொண்ட நிலம். அமைவிடம் திருப்பூர் பதிவு மாவட்டம், திருப்பூர் 1ஆம் இணை சார்பதிவு மாவட்டம், திருப்பூர் வடக்கு தாலுகா, தொட்டிப்பாளையம் கிராமம். SF எண் 47, மண்டலம் 2 திருப்பூர் மாநகராட்சி, அண்ணா தெரு, குமாரனந்தபுரம் சென்ட்ரல், கதவு எண் 2, 47, 8ஆவது தெரு கிழக்குப் பக்கம். எல்லைகள்: வடக்கில்: 20 அடி கிழக்கு மேற்குச் சாலை, தெற்கில்: மல்லி செட்டியார் அவர்களின் சொத்து, கிழக்கில்: கந்தசாமி அவர்களின் சொத்து, மேற்கில்: ஜானகியம்மாள் அவர்களின் சொத்து. இவற்றுக்கிடையே உள்ள அளவீடு: கிழக்கு மேற்காக வடக்கில் 28–3/4 அடி, கிழக்கு மேற்காகத் தெற்கில் 28–3/4 அடி, வடக்குத் தெற்காகக் கிழக்கில் – 42 அடி, வடக்குத் தெற்காக மேற்கில் 42 அடி, மொத்தப் பரப்பளவு 1207–1/2 சதுர அடிக் கொண்ட நிலம் மற்றும் அங்குள்ள கட்டடங்கள் மற்றும் அங்குள்ள அனைத்து துணைப்பகுதிகள் உட்பட.

சொத்தின் உரிமையாளர்		**திரு. K ராமச்சந்திரன், த/பெ. திரு. கந்தசாமி செட்டியார்**
13(2) அறிவிப்பு தேதி	**கையக சுவாதீன தேதி**	**17.09.2025 தேதிப்படி நிலுவைத்தொகை**
28.02.2022	20.12.2024	**ரூ.70,98,427.12/– (ரூபாய் எழுபது லட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து நானூற்று இருபத்தேழு மற்றும் பன்னிரண்டு பைசா மட்டும்)**

நிர்ணய விலை	முன்வைப்புத்தொகை (EMD) (நிர்ணய விலையில்10%)	ஏல உயர்வுத் தொகை	சொத்து ஆய்வு தேதி மற்றும் நேரம்
ரூ.61,00,000/– (ரூபாய் அறுபத்தொரு லட்சம் மட்டும்)	ரூ.6,10,000/– (ரூபாய் ஆறு லட்சத்து பத்தாயிரம் மட்டும்)	ரூ.40,000/– (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்)	மேலே குறிப்பிட்டுள்ள கைப்பேசி எண்கள் மூலமாக அதிகாரப்பூர்வ அலுவலரிடம் முன் அனுமதி பெற்று.

கணக்கு விவரங்கள்	**கணக்கு எண் 344905001084, பயனாளர் பெயர்: ஓம்காரா PS 06/2021–22 டிரஸ்ட், வங்கியின் பெயர்: ICICI வங்கி, கிளை: பாந்த்ரா (கி) மும்பை, IFSC குறியீடு: ICIC0003449.**
மின் ஏல தேதி மற்றும் நேரம்:	**அக்டோபர் 29, 2025 அன்று முற்பகல் 11:00 மணி முதல் நண்பகல் 12:00 மணி வரை**
ஏலத்தில் கலந்து கொள்வதற்கான ஏலப்புள்ளிக் கடிதம் / வாடிக்கையாளர் விவர (KYC) ஆவணம் / முன்வைப்புத்தொகைச் (EMD) சான்று ஆகியவற்றை சமர்ப்பிக்க கடைசி தேதி மற்றும் நேரம்:	**அக்டோபர் 27, 2025 அன்று மாலை 04:00 மணிக்குள்.**

ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்: விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அறிய ஈடு பெற்றுக் கடனளித்த (OARPL) நிறுவனத்தின் http://omkaraarc.com/auction.php எனும் இணையதளத்தில் அல்லது சேவை வழங்குநரின் https://www.bankeauctions.com எனும் இணையதளத்தில் அளிக்கப்பட்டுள்ள இணைப்பைக் காண்க.

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6) & 9(1) ஆகியவற்றின் கீழான சட்டப்படியான விற்பனை அறிவிப்பு

இந்த அறிவிப்பு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002–இன் கீழும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6) அதனுடன் 9(1) ஆகியவற்றின்படியும் மேற்குறிப்பிட்ட கடன் கணக்கின் கடன்தாரர்களுக்கு மேற்கண்ட தேதியிலும் நேரத்திலும் மின் ஏல முறையிலான ஏலம் / விற்பனை நடைபெற உள்ளது பற்றியும் விரும்பினால் மேலே கூறியபடி நிலுவைத் தொகைகளை 18.09.2025 வரையான மேல்வட்டி மற்றும் அனைத்துச் செலவினங்கள், கட்டணங்கள், செலவுகள் ஆகியவற்றுடன் விற்பனை முடிவதற்கு முன் எந்த நேரத்திலும் செலுத்திச் சொத்துக்களை மீட்டுக் கொள்ளும்படியும் அறிவுறுத்தும் 30 (முப்பது) தேதிக்குக் குறையாத இன்றியமையா அறிவிப்பும் ஆகும். தொகையைச் செலுத்தத் தவறினால், சொத்தானது அதிகாரப்பூர்வ அலுவலரின் / ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்தின் விருப்புரிமைக்கேற்ப கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(5)–இன் பரிந்துரைக்கப்பட்டுள்ள எந்த முறையின்படியும் விற்பனை செய்யப்படும்.

தேதி: 20.09.2025
இடம்: சென்னை

கார்த்தி கோவிந்தசாமி
அதிகாரப்பூர்வ அலுவலர்,
கைப்பேசி எண்: 9344684194
ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டிரக்ஷன் பிரைவேட் லிட்.
(ஓம்காரா PS 06/2021–22 டிரஸ்ட்டின் டிரஸ்ட்டி எனும் முறையில்)